**வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II (பிஎம்பி II) மற்றும் வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II – சுழற்சி நிதி (பிஎம்பி II – ஆர்எவ்) - 2018**

வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II – சுழற்சி நிதி (பிஎம்பி II – ஆர்எவ்) ("செயற்திட்டம்") இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (ஜெஐசிஏ) என அறியப்படும் முன்னைய சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜெபிஐசி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூலை 29 ஆம் திகதிய எஸ்எல்-பி94 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II (பிஎம்பி II) மற்றும் வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II – சுழற்சி நிதி (பிஎம்பி II – ஆர்எவ்) ஆகியவற்றின் செயற்பாடுகள் குறித்து இலங்கை மத்திய வங்கியினால் தயாரித்து மற்றும் வழங்கப்பட்ட 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II – சுழற்சி நிதி இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்திற்கான நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக இலங்கை மத்திய வங்கி உள்ளது. வறியோர்களின் வருமான மட்டத்தை முன்னேற்றுதல் மற்றும் வருமானம் உருவாக்கல் நடவடிக்கைகளுக்காக கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்கான முறையாக உள்ளடக்கிய ஒரு நிதிச் சேவையை விருத்தி செய்தல், பங்குபற்றல் நிதி நிறுவனங்கள் (பிஎவ்ஐஎஸ்) மற்றும் பங்குதாரர் முகவராண்மைகள் (பிஎஸ்) என்பவற்றின் முகாமைத்துவம் மற்றும் பயிற்சியளித்தல் இயலளவை முன்னேற்றுதல் மற்றும் வருமானம் உருவாக்கல் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் பயனாளிகளின் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் வறுமை ஒழிப்பிற்கு பங்களித்தல், பிராந்திய சமமின்மையை மட்டுப்படுத்துதல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு ஆதரவு வழங்குதல் ஆகியன நிகழ்ச்சிதிட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சிதிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா. 3,076 மில்லியனுக்கு சமமான 2,759 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும். அதில் ரூபா. 2,704 மில்லியனுக்கு சமமான 2,575 மில்லியன் ஜப்பானிய யென் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பு செய்யப்படுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. செயற்திட்டமானது 2009 சனவரியில் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்தது மற்றும் 2013 டிசெம்பர் இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2013 மே 10 முதல் ஆரம்பித்து 2018 யூலை 14 வரையான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்திட்டம் II – சுழற்சி நிதி (பிஎம்பி II – ஆர்எவ்) கடன் திட்டம் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின்

பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம்,

வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வு காலப்பகுதியில் என்னால் அடையாளம் காணப்படுகின்ற ஏனைய விடயங்களில், உள்ளக கட்டுப்பாட்டின் ஏதாவது குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், தொடர்பாக அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களுடன் நான் தொடர்பு கொண்டேன்.

**2. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

நிதியளிப்பு மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் செலவுகளுக்காக செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது | | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ. யென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஜ. யென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஜ. யென் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| கடன் வழங்கும் நிறுவனம் | 2,575 | 2,704 | - | - | - | 2,562 | 3,470 |
| இலங்கை அரசு | - | 372 | 32.45 | - | 15.10 | - | 308 |
| மொத்தம் | 2,575 | 3,076 | 32.45 | - | 15.10 | 2,562 | 3,778 |

## 3. இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் (ரூபா.) | முகாமையின் பதில் | கணக்காளரினுடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றில் ரூபா 2.83 மில்லியன் தொகையான நட்டக்கழிவு படி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 2019 ஜனவரி இல் முதிர்ச்சியடைந்த நேர்மாற்று மீள் கொள்வனவு முதலீட்டின் மீது மொத்தமாக ரூபா 40.53 மில்லியன் ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த நேர்மாற்று மீள் கொள்வனவு முதலீட்டில் ஈடுபட்ட முதல்நிலை வணிகரினால் இலங்கை மத்திய வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை மீறல் காரணமாக இவ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. | 40,537,679 | பதில் இல்லை | நேர்மாற்று மீள் கொள்வனவு முதலீட்டிற்கான பிணையங்களின் போதுமான தன்மையினை கண்காணிக்க வேண்டிய தேவை உள்ளது. |